**QUESTION 1.** Unanswered

தோழி என்ற சொல் பன்மையில் வரும்போது எவ்வாறு வழங்கப்படும்.

a) தோழிகள், தோழியர்
b) தோழியர், தோழிமார்
c) தோழிகள், தோழிமார்
d) அனைத்தும்

**QUESTION 2.** Unanswered

தேனீ என்ற சொல்லின் பன்மையைக் கண்டறியவும்.

a) தேனிகள்
b) தேனிக்கள்
c) தேனீகள்
d) தேனீக்கள்

**QUESTION 3.** Unanswered

பொருந்தாததைத் தேர்க. (ஒருமை பன்மை அடிப்படையில்).

a) இ
b) ப
c) அன்
d) டு

**QUESTION 4.** Unanswered

ஒருமை பன்மை அடிப்படையில் பிழையற்ற தொடரைத் தேர்க.

1. எங்கள் ஊரில் உள்ள ஒவ்வொருவரும் நாள்தோறும் உடற்பயிற்சி செய்தார்.

2. மலைகளில் உள்ள ஒவ்வொரு மரமும் இயற்கையைக் காக்கின்றன.

3. கடவுள் தன்னையே மக்கள் வஞ்சிப்பதாக வருத்தப்பட்டார்.

4. இவ்வழியாக யானையோ புலியோ சென்றிருக்கலாம்

a) 1 மட்டும்
b) 2 மட்டும்
c) 3 மட்டும்
d) 4 மட்டும்.

**QUESTION 5.** Unanswered

ஒருமை பன்மை அடிப்படையில் கீழே உள்ள தொடரில் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

a) ஒவ்வொரு கண்களாய் விழிக்கத் தொடங்கிய நேரம்.
b) ஒவ்வொரு கண்களாய் விழிக்கத் தொடங்கிய நேரங்கள்
c) ஒவ்வொரு கண்ணாய் விழிக்கத் தொடங்கிய நேரம்.
d) ஒவ்வொரு கண்ணாய் விழிக்கத் தொடங்கிய நேரங்கள்.

**QUESTION 6.** Unanswered

சில கிழடுகள் மட்டும் செங்கல் உரசி, பல்லுள்ள இடத்தில் மட்டும் அப்படியும் இப்படியும் தேய்த்து, தண்ணீரில் வாய் கொப்பளித்துவிட்டு அந்த ஆளுக்கு ஆகுமென்று மிச்சத் தண்ணீரைச் சொம்போடு வைத்தும் சிக்கனம் செய்தன. மேலே கொடுக்கப்பட்ட பத்தியைப் பற்றிய சரியான தொடரைத் தேர்ந்தெடுங்கள்.

a) ஒருமைப்பன்மை அடிப்படையில் சரி ஆனால் திணை வழு உள்ளது
b) ஒருமை பன்மை அடிப்படையில் சரி
c) ஒருமை பன்மை அடிப்படையில் தவறு
d) ஒருமைப் பன்மை அடிப்படையில் வழு உள்ளது ஆனால் திணை அடிப்படையில் சரியாக உள்ளது.

**QUESTION 7.** Unanswered

கீழே உள்ள வரிகளில் ஒருமை பன்மை அடிப்படையில் பொருந்தாததைத் தேர்ந்தெடு.

a) கடல் அலைகள் நகரத்தை மோதுவதைக் கண்டேன்
b) எனக்கு இரண்டாவது ஞானம் பிறந்தது.
c) நானும் நீயும் பெற்றோருக்கு ஒருமகள், ஒரு மகனாகப் பிறந்தோம்.
d) மனித உயிர்கள் தன்னைத் தானே கேட்டுக் கொள்கின்ற கேள்வி.

**QUESTION 8.** Unanswered

ஒருமை பன்மை வேறுபாடில்லாத இலக்கணப் பொருண்மைகளைத் தேர்க.

1. முன்னிலை

2. அஃறிணை

3. தன்மை

4. உயர்திணை

5. படர்க்கை

a) 2,4 மட்டும்
b) 1,3,5 மட்டும்
c) A மற்றும் B
d) அனைத்தும்

**QUESTION 9.** Unanswered

அன்று முற்பகலில் தன் இடுப்பில் முதல் கோடரி வெட்டு விழுந்தது உணர்ந்து பதறிச் சிலிர்த்தது புளியமரம். மேலே குறிப்பிட்ட செய்தியின் நேர்மறை ஒருமை தொடரில் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்

a) அன்று முற்பகலில் தம் இடுப்பில் முதல் கோடரி வெட்டு விழுந்ததை உணர்ந்து பதறிச் சிலிர்த்தது புளியமரம்
b) அன்று முற்பகலில் தன் இடுப்பில் முதல் கோடரி வெட்டு விழுந்ததை உணர்ந்து சிலிர்த்தது புளியமரம்
c) அன்று முற்பகலில் தம் இடுப்பில் விழ இருந்த வெட்டு தடுத்து நிறுத்தப்பட்டதை உணர்ந்து சிலிர்த்தது புளியமரம்
d) அன்று முற்பகலில் தன் இடுப்பில் விழ இருந்த வெட்டு தடுத்து நிறுத்தப்பட்டதை உணர்ந்து சிலிர்த்தது புளியமரம்.

**QUESTION 10.** Unanswered

கூற்று 1: இனியனும் மாடும் குளத்தில் குளித்தனர்.

கூற்று 2: தலைவரும் தொண்டரும் பத்திரிகைகளும் அலுவலகத்தில் இருந்தனர்.

a) கூற்று 1,2 சரி
b) கூற்று 1சரி,2தவறு
c) கூற்று 1,2 தவறு
d) கூற்று 1தவறு,2சரி

**QUESTION 11.** Unanswered

பொருந்தாச் சொல்லைத் தேர்க.

a) மூவேந்தர்கள்
b) அறுசுவைகள்
c) பாடல்கள்
d) முக்கனிகள்

**QUESTION 12.** Unanswered

ஒருமை பன்மை அடிப்படையில் விடையைத் தேர்க.

தொடர்: விளையாட்டுத் திடல் பணியாளர்களால் தூய்மை செய்யப்பட்டது.

விளக்கம்: இங்கு எழுவாய் பணியாளர்கள் அல்ல. விளையாட்டுத் திடல்தான் அஃது ஒருமை. எனவே வினைமுற்றிலும் ஒருமை வரவேண்டும்.

a) தொடர் விளக்கம் சரி
b) தொடர் சரி விளக்கம் தவறு
c) தொடர் தவறு விளக்கம் சரி
d) இரண்டும் தவறு

**QUESTION 13.** Unanswered

பத்து மூட்டை தூக்கியிருக்கிறேன் என்று ஒரு தொழிலாளி சொல்கிறார். இத்தொடரைப் பற்றிய பின்வரும் கருத்தில் எது சரியாக உள்ளது

a) பத்து மூட்டை என்பது தவறு
b) பத்து மூட்டை என்பது சரி
c) இது பிழையான தொடர்
d) A மற்றும் C

**QUESTION 14.** Unanswered

கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் தவறானதைத் தேர்க

a) ஒவ்வொரு என்று வந்தால் அதன் பிறகு ஒருமைதான் வரவேண்டும்
b) எல்லா என்று வந்தால் பன்மை வர வேண்டும்
c) எந்த என்று வந்தால் அதன் பிறகு ஒருமை வரவேண்டும்
d) எதுவுமில்லை

**QUESTION 15.** Unanswered

தவறான தொடரைத் தேர்க.

a) சிறுமி தனது கையில் மலர்களை வைத்திருந்தாள்
b) அம்பேத்கார் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் தனது உழைப்பை நல்கினார்
c) உயர்ந்தோர் தம்மைத்தாமே புகழ்ந்து கொள்ள மாட்டார்கள்
d) நதிகள் தோன்றும் இடத்தில் சிறியனவாய் இருக்கும்.

**QUESTION 16.** Unanswered

கூற்று: புள்+கள் - புற்கள் என புணரும்.
காரணம்: 'ள்' என்கிற எழுத்துடன் 'கள்' விகுதி இணையும் போது 'ற்கள்' என்று புணரும். அதாவது, 'ள்' என்பது 'ற்' ஆகத்திரிந்து புணரும்.

a) கூற்று,காரணம் இரண்டும் சரி
b) கூற்று சரி,காரணம் தவறு.
c) கூற்று தவறு,காரணம் சரி.
d) கூற்று காரணம் இரண்டும் தவறு.

**QUESTION 17.** Unanswered

கூற்று: 'பன்னிரண்டு வளையல்கள்' சேர்ந்தது ஒரு டஜன் ஆகும். இங்கு ஒருமை பன்மை பிழையாதுமில்லை.
காரணம்: எண்ணுப்பெயர் அடையாகப் பயின்றுவந்துள்ளது.

a) கூற்று காரணம் இரண்டும் சரி.
b) கூற்று சரி,காரணம் தவறு.
c) கூற்று தவறு,காரணம் சரி.
d) கூற்று காரணம் இரண்டும் தவறு.

**QUESTION 18.** Unanswered

சரியற்றதைத் தேர்க.

1)நம் நாட்டின் வளர்ச்சிக்காகப் புதுப்புது திட்டங்கள் நாள்தோறும் தோன்றிய வண்ணம் உள்ளது.

2)கடைத்தெருவில் வண்டிகள் வரிசையாக நிற்கிறது.

3)ஒரு மாதம் தவிராமல் எல்லா உறுப்பினரும் மாதச் சந்தாவினைச் செலுத்தினர்.

a) 1,2மட்டும்
b) 2,3மட்டும்
c) 1,3மட்டும்
d) அனைத்தும்

**QUESTION 19.** Unanswered

சரியான தொடரமைப்பினைத் தேர்க.

1)அங்கு வந்தது நீ அல்ல என்பது எனக்குத் தெரியும். ஆனால், அங்குச் சென்றது நான் அல்லேன் என்பதை நீ அறிவாயா?

2)கபிலன் அன்று உன்னிடம் கேட்டதற்கு ஏன் அவ்வாறு கூறினாய், நான் அன்று என்று.

3)மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அன்று.

a) 3,1சரி;2தவறு
b) 1,2,3சரி

c) 1,2சரி;3தவறு
d) 3 சரி ; 2,1 தவறு

**QUESTION 20.** Unanswered

பிழையற்றதைத் தேர்க.

1)மத்திய அரசால் ஒதுக்கப்படும் ஒதுக்கீட்டு நிதியில் ஒவ்வொரு மாநிலங்களும் சரியான அளவு நிதியினைப் பெறுவதில்லை.

2)நாளை எந்தப் பேருந்துகளும் ஓடா. ஏனெனில் அதிகரித்து வரும் எரிபொருள் விலையினைக் கண்டித்து எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

a) 1,2சரி
b) 1சரி,2தவறு
c) 1தவறு,2சரி
d) 1,2 தவறு

**QUESTION 21.** Unanswered

'காலங்காட்டும் இடைநிலையும், பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சம்' எவ்வாறு அழைக்கப்படுகிறது என்பதை பின்வருவனவற்றுள் தேர்ந்தெடு.

a) வினையெச்சம்
b) பண்புத்தொகை
c) வினைத்தொகை
d) எதிர்மறை பெயரெச்சம்

**QUESTION 22.** Unanswered

கீழ்வருவனவற்றுள் 'செய்வினை வாக்கியம்' எது?

a) உழவனால் நெற்பயிர் வளர்க்கப்பட்டது
b) பாரதிதாசன் 'பாண்டியன் பரிசைப்' பாடினார்
c) சேக்கிழார் சோழனால் வரவேற்கப்பட்டார்
d) பாண்டியன் பரிசு பாரதிதாசனால் பாடப்பட்டது

**QUESTION 23.** Unanswered

ஒருமை பன்மை அடிப்படையில் பிழையற்ற தொடரைத் தேர்க.

a) சில பேருந்து இன்று ஓடாது
b) பலர் விடுதியில் இருந்து நேற்றே சென்றுவிட்டனர்.

c) சில இனிப்பும் பல பழங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.
d) G7 உச்சி மாநாட்டில் பிறநாட்டு தலைவர்கள் பலர் பங்கேற்றார்.

**QUESTION 24.** Unanswered

பிழையற்ற ஒருமை பன்மை அமைப்பைத் தேர்க.

a) எனக்கு உணவு நீர் தான் கொடுத்தீர்.
b) அறம் செய்யாதவர்கள் மக்கள் இல்லை.
c) நேற்று இரவு அவை தாம் ஓடியது.
d) பெரியதும் சிறியதுமான கோவில்கள் இருந்தன.

**QUESTION 25.** Unanswered

கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக.

தலைவர்_______தொண்டர்களோடு_________அலுவலகத்திற்குச்சென்றார்.
தொண்டர்________தலைவரை ________கையால் வணங்கினார்.

a) தமது,தம்,தனது,தன்.
b) தம்,தமது,தன்,தனது.
c) தனது,தன்,தனது,தன்.
d) தம்,தமது,தம்,தமது.

**QUESTION 26.** Unanswered

சரியான இணையைத் தேர்க.

a) நவ்வி - மான்
b) புனல் - மேகம்
c) முகில் - சொரிதல்
d) உகுதல் - நீர்

**QUESTION 27.** Unanswered

சரியான இணைகள் எத்தனை எனக் காண்க.

1. எத்தனை ஆண்டு பழமையானது

2. முக்கனியில் சிறந்தது வாழை

3. அவை அங்கே உள

4. இந்தியாவிற்கு அது உரிமையானது

5. சாலையில் இடப்பக்கம் செல்ல வேண்டும்.

a) 2 இணை
b) 3இணை
c) 4இணை
d) 5இணை

**QUESTION 28.** Unanswered

பொருந்தாச் சொல்லைத் தேர்க.

a) ஓஒதல்
b) படாஅ
c) விலக்க்கு
d) கொடுப்பதூஉம்

**QUESTION 29.** Unanswered

ஒருமை பன்மை பிழையற்ற தொடரைத் தேர்க.

a) ஒரு மொழி நிலைத்து நிற்பதற்கு அதன் பழமையும் வளமையும் மற்றும் போதாது
b) காய்ந்து கொண்டிருக்கும் பசிய தினையைச் செம்பூழ்ப்  பறவைகள் கவர்ந்து செல்லும் கடினமான நிலப்பகுதியைக் கொண்ட நாட்டினை உடையவன் நமது தலைவன்.
c) காட்டு யானையானது தான் வளைத்த மூங்கிலைத் தினைப்புனம் காக்கும் காவலர்களின் கவண் ஒலிக்குப் பயந்து விட்டுவிடுகின்றது.
d) ஒளிவீசும் சிறந்த மணிவகைகள் பதித்த மாளிகைகளை உடையது வீதிகள்.

**QUESTION 30.** Unanswered

சரியான விடையை மொழியுடன் பொருத்துக.

வட்டார மொழி - 1. நாளேடுகள்

கிளை மொழி - 2. உணர்ச்சி மொழி

எழுத்து மொழி - 3. கன்னடம், தெலுங்கு

பேச்சு மொழி - 4. இருக்குது

a) 3 4 1 2
b) 1 2 3 4
c) 2 1 4 3
d) 4 3 1 2

**QUESTION 31.** Unanswered

ஒருமை பன்மை பிழையுற்ற அமைப்பைத் தேர்க.

a) புதினம் வாழ்வின் ஒரு துளியை ஒரு புள்ளியை ஒரு தரப்பை மட்டும் சொல்ல வந்த வடிவம் அன்று.
b) தனக்கு நேர்ந்த கதி தன் மகளுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அவளையும் தன்னைப் போலவே பௌத்த துறவியாக்கி இருந்தாள் மாதவி.
c) முன்பு உயர்ந்த பொருளில் வழங்கி வந்த சொல் காலப்போக்கில் இழிந்த பொருளைத் தருவதும் உண்டு.
d) பிற தத்துவங்கள் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க மார்க்சியம் பொருள் முதல் என்பதை மையமாகக் கொண்டுள்ளன.

**QUESTION 32.** Unanswered

"நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்" இதில் 'நயம் இல' என்பதற்குப் பொருத்தமான எதிர்ச்சொல்.

a) வஞ்சகம்
b) சூழ்ச்சி
c) நன்மை
d) பழித்தல்

**QUESTION 33.** Unanswered

பொருந்தாத இணையைக் கண்டறிக.

a) கோலம் - அழகு
b) கூளம் - தானியம்
c) குழவி - குழந்தை
d) கூறை - புடவை

**QUESTION 34.** Unanswered

'கூடா நட்புக் கேடாய் முடியும்' – இப்பழமொழியால் நாம் அறிவனவற்றைத் தேர்க

கூற்று 1: தீயவரோடு கொண்ட நட்பு துன்பத்தில் முடியும்

கூற்று 2 : நட்பு நமக்குக் கேடயம் போல் பாதுகாப்பு தரும்.

a) கூற்று 1 சரி
b) கூற்று 2 சரி
c) கூற்று 1ம், 2ம் சரி

d) கூற்று 1ம், 2ம் தவறு

**QUESTION 35.** Unanswered

அகர வரிசையில் அமைத்தெழுது

மீன், மண், முன், மான், மூடி, மெல்ல, மிளகு, மேடு

a) மான், மூடி, மிளகு, மேடு, மெல்ல, மீன், மண், முன்
b) மண், மீன், முன், மூடி, மிளகு, மேடு, மெல்ல, மான்
c) மண், மான், மிளகு, மீன், முன், மூடி, மெல்ல, மேடு
d) மான், முன், மூடி, மேடு, மெல்ல, மிளகு, மண், மீன்

**QUESTION 36.** Unanswered

வேர்ச்சொல் - காண்க.

ஞாலம் 6024

a) ஞல்
b) ஞாள்
c) ஞால்
d) ஞாலு

**QUESTION 37.** Unanswered

1981 - முதல் உலகத்தமிழ் மாநாட்டில் "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றியவர் :

a) வையாபுரிப் பிள்ளை
b) அ. சிதம்பரநாதன்
c) சாலை. இளந்திரையன்
d) தேவநேயப் பாவாணர்

**QUESTION 38.** Unanswered

தேவநேயப் பாவாணர்

கூற்று (i) : 'மொழிஞாயிறு' என்றழைக்கப்படுகிறார்.

கூற்று (ii) : செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக பணியாற்றியவர்:

கூற்று (iii) : 'பள்ளிப் பறவைகள்' என்ற நூலை எழுதியவர்

a) கூற்று (i) மற்றும் (iii) சரி

b) கூற்று (ii) மற்றும் (iii) சரி
c) கூற்று (i) மட்டும் சரி
d) கூற்று (i) மற்றும் (ii) சரி

**QUESTION 39.** Unanswered

சந்திப்பிழை அற்ற வாக்கியத்தைக் கண்டறிக.

a) இந்த பூமியின் ஒவ்வொரு துகளும் எம்மக்களுக்குப் புனிதமானதாகும்.
b) இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் எம்மக்களுக்கு புனிதமானதாகும்
c) இந்த பூமியின் ஒவ்வொருத் துகளும் எம்மக்களுக்குப் புனிதமானதாகும்
d) இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் எம்மக்களுக்குப் புனிதமானதாகும் .

**QUESTION 40.** Unanswered

பொருத்துக.

A)செய்யுளிசை அளபெடை - 1. எங்ங்கிறைவன்

B)இன்னிசை அளபெடை - 2. வரனசைஇ

C)சொல்லிசை அளபெடை - 3. கெடுப்பதூஉம்

D)ஒற்றளபெடை - 4. நல்ல படாஅ பறை

a) 4 3 2 1
b) 4 3 1 2
c) 1 2 3 4
d) 1 2 4 3

**QUESTION 41.** Unanswered

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க:

1. இவரது இயற்பெயர் கல்யாணசுந்தரம்; பெற்றோர் அருணாச்சலம் - விசாலாட்சி ஆவர்.

2. இவரது ஊர் புதுக்கோட்டையில் உள்ள சங்கம்படைத்தான் காடு.

3. இவர் முதன்முதலில் கவிதை எழுதியபோது அவரின் வயது பதினான்கு ஆகும்.

a) கூற்று 1, 2 மட்டும் சரி
b) கூற்று 2, 3 மட்டும் சரி
c) கூற்று 1, 3 மட்டும் சரி
d) அனைத்து கூற்றுகளும் சரி

**QUESTION 42.** Unanswered

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திற்கு ‘மக்கள் கவிஞர்’ என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது குறித்த சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க:

1. தோழர் ப. ஜீவானந்தம் இவரை ‘மக்கள் கவிஞர்’ என்னும் சிறப்புப் பெயரால் அழைத்தார்.

2. 1959 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் தொழிலாளர் சங்கம் இவருக்கு 'மக்கள் கவிஞர்' என்று பட்டம் அளித்தது.

a) கூற்று 1 மட்டும் சரி
b) கூற்று 2 மட்டும் சரி
c) இரண்டு கூற்றுகளும் சரி
d) இரண்டு கூற்றுகளுமே தவறு.

**QUESTION 43.** Unanswered

புகழுரைகள் குறித்த கீழ்க்காணும் இணைகளில் தவறான இணையைக் கண்டறிக:( மக்கள் கவிஞர்).

I. ‘நீ மீண்டும் தோன்றிய பாரதியடா’ - ஜெயகாந்தன்.

II. ‘எனது வலது கை’ - பாரதிதாசன்.

III. 'அவர் கோட்டை நான் பேட்டை' - பகுத்தறிவு கவிராயர்.

a) இணை I மட்டும்
b) இணை I,II மட்டும்
c) இணை III மட்டும்
d) இணை II, III மட்டும்

**QUESTION 44.** Unanswered

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் திரையுலகப் பயணம் குறித்த கீழ்க்காணும் கூற்றுகளில் பொருத்தமற்றதைத் தேர்வு செய்க:

1) சினிமாவில் இவர் எட்டு ஆண்டுகள் (1951-1959) இருந்தார்.

2)இவர் எழுதிய மொத்த திரைப்படப் பாடல்களின் எண்ணிக்கை 56 ஆகும்.

3) 1954 ஆம் ஆண்டு 'படித்த பெண்' என்னும் திரைப்படத்திற்கு முதன்முறையாகப் பாடல் எழுதினார்.

4)நடிப்பின் மீது இருந்த ஆசையின் காரணமாக இவர் ‘சக்தி நாடகசபா’-வில் இணைந்தார். மகாகவியின் உதவியாளராகப் பணியாற்றிப் பின் கவிஞர் ஆனார்.

a) 1,2,4மட்டும்

b) 1,4 மட்டும்
c) 1,2 மட்டும்
d) 3,2 மட்டும்

**QUESTION 45.** Unanswered

கீழ்க்காணும் முக்கிய ஆண்டுகளை அதனுடன் தொடர்புடைய நிகழ்வுகளுடன் சரியாகப் பொருத்துக:

1. 1993 — i) பாவேந்தர் விருது வழங்கப்பட்டது (மறைவுக்குப் பின்)

2. 1981 — ii) பட்டுக்கோட்டையில் மணிமண்டபம் திறந்து வைக்கப்பட்டது

3. 2000 — iii) இவரது பாடல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

4. 1959 — i V) மறைவு

a) 1-i, 2-ii, 3-iii, 4-iV
b) 1-iii, 2-i, 3-ii, 4-iV
c) 1-ii, 2-i, 3-iii, 4-iV
d) 1-iV, 2-ii, 3-i,4-iii

**QUESTION 46.** Unanswered

"மனிதன் ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே - அவன் ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே" என்ற தத்துவ வரிகள் இடம்பெற்ற திரைப்படம் எது?

a) படித்த பெண்
b) தங்கப்பதுமை
c) சக்தி நாடகம்
d) ஜனசக்தி

**QUESTION 47.** Unanswered

கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க:(மக்கள் கவிஞர்)

1. இவரது கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டது நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ஆகும் .

2. கருத்து செறிவும் கற்பனை உரமும் மிகுந்த இவரது பாடல்கள் 'ஜனசக்தி' எனும் பத்திரிக்கை மூலம் வெளியிடப்பட்டன.

3. "மாற்றார் கைப்பொருளை நம்பி வாழக் கூடாது - தன் மானமில்லாக் கோழையுடன் சேரக் கூடாது" - என்ற பாடல் '' செய்யும் தொழிலே தெய்வம் '' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

a) கூற்று 1, 2 மட்டும் சரி
b) கூற்று 2, 3 மட்டும் சரி

c) கூற்று 1, 3 மட்டும் சரி
d) அனைத்து கூற்றுகளும் சரி

**QUESTION 48.** Unanswered

சரியான விடையைத் தேர்க.

கூற்று: முதுமொழிக்காஞ்சி 'ஆத்திசூடியின் முன்னோடி' என்ற சிறப்புப் பெயரால் வழங்கப்படுகிறது.

காரணம்: இந்நூல் மகளிர் அணியும் காஞ்சி என்னும் பல மணிகளைக் கோவையாகக் கொண்ட அணிகலன் போல, பல முதுமொழிகளைக் கோவையாகக் கொண்டுள்ளது.

a) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி; காரணம், கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.
b) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி; ஆனால் காரணம், கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
c) கூற்று சரி, காரணம் தவறு.
d) கூற்று தவறு, காரணம் சரி.

**QUESTION 49.** Unanswered

பின்வரும் கூற்றுக்களைக் கவனி:

1. முதுமொழிக்காஞ்சி காஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்றாகும்.

2. இந்நூலின் பாடல்கள் அனைத்தும் 'குறள்வெண் செந்துறை' என்ற யாப்பால் ஆனவை.

3. இந்நூல் 10 பிரிவுகளையும், பிரிவுக்கு 10 பாடலாக மொத்தம் 100 பாடல்களையும் கொண்டுள்ளது.

4. ஒவ்வொரு பத்தும் “ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்” என்று முடிகிறது.

a) 1,2,3மட்டும்சரி
b) 2,3,4மட்டும்சரி
c) 1,3,4மட்டும்சரி
d) அனைத்தும்சரி

**QUESTION 50.** Unanswered

பொருத்துக.

1. ஆர்கலி - i. கொடைத்தன்மை

2. வண்மை - ii. நிறைந்த ஓசையையுடைய கடல்

3. செற்றார் - iii. அழகு / குணம்

4. நலனுடைமை - iv. பகைவர்

a) 1-ii,2-i,3-iv,4-iii
b) 1-ii,2-iv,3-i,4-iii
c) 1-iii,2-i,3-iv,4-i
d) 1-i,2-ii,3-iii,4-iv

**QUESTION 51.** Unanswered

சரியான இணைகளைத் தேர்க.

1 ) சிறந்த பத்து - ஓதலின் சிறந்தன்று ஒழுக்க முடைமை

2) அறிவுப்பத்து - சொற்சோர் வுடைமையின் எச்சோர்வும் அறிப

3) பழியாப்பத்து - அறியாத் தேயத்து ஆசாரம் பழியார்

4) சிறந்த பத்து - இளமையின் சிறந்தன்று வாய்மை உடைமை

a) 1,2 மட்டும்
b) 1,2,3மட்டும்
c) 2,3,4மட்டும்
d) அனைத்தும்

**QUESTION 52.** Unanswered

சரியான விடையைத் தேர்க .

1. முதுமொழிக்காஞ்சியின் ஆசிரியர் மதுரைக் கூடலூர்கிழார் ஆவார்.

2. இவருடைய பாடல்களை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்கள் மேற்கோள்களாகக் கையாண்டுள்ளனர்.

3. இவர் சங்க காலத்திற்கு முன்பே வாழ்ந்தவர்; இவரது காலம் 5-ஆம் நூற்றாண்டு ஆகும்.

4. ஐங்குறுநூற்றைத் தொகுத்தவரும் கூடலூர் கிழாரே ஆவார்.

a) 1,2,3மட்டும்சரி
b) 1,2,4மட்டும்சரி
c) 2,3,4மட்டும்சரி
d) அனைத்தும்சரி

**QUESTION 53.** Unanswered

பொருந்தாததைத் தேர்க:

a) 'கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.'
b) 'முன்பெருகலின் பின் சிறுகாமை சிறந்தன்று.'
c) 'அறியாத் தேயத்து ஆசாரம் பழியார்.'
d) 'காதலின் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.'

**QUESTION 54.** Unanswered

திருக்குறளுக்குச் சிறப்புப் பெயர் வைத்து அழைத்தவர்களில் கீழ்க்கண்டவற்றுள் சரியான இணையைத் தேர்ந்தெடு:

I. புகழ்ச்சி நூல் - தோலாமொழித் தேவர்

II. திருவள்ளுவ பயன் - நச்சினார்க்கினியர்

III. பொருளுரை - சீத்தலை சாத்தனார்

IV. இயற்கை வாழ்வில்லம் - திரு.வி.க

a) I, II மட்டும் சரி
b) II, III மட்டும் சரி
c) I, II, III மட்டும் சரி
d) அனைத்தும் சரி

**QUESTION 55.** Unanswered

பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து சரியற்றதைத் தேர்வு செய்க:

I. முதல் தமிழ் கணினி 'திருவள்ளுவர்' 1983-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

II. திருக்குறள் நீரோட்டம் பாயாத தமிழ் வயல்களே இல்லை - சி. இலக்குவனார் திருக்குறளுக்குப் புகழாரம் சூட்டினார்.

III. திருவள்ளுவரின் உருவத்தில் நாணயம் வெளியிட்டவர் ஜி.யு. போப் ஆவார்.

சரியற்றதைத் தேர்வு செய்க.

a) I, II மட்டும்
b) II, III மட்டும்
c) I, III மட்டும்
d) அனைத்து கூற்றுகளும் சரி

**QUESTION 56.** Unanswered

திருக்குறளின் சிறப்பினை உணர்ந்த வெளிநாட்டு அறிஞர்களின் கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடு:

1). "அழகிய சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளித்தட்டு தமிழ்; அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள் திருக்குறள்" - டாக்டர் கிரௌல்

2). "உலக இலக்கியங்களில் திருக்குறளைப் போல் சிறந்த அறம் உரைக்கும் நூல் வேறு இல்லை" - ஆல்பர்ட் சுவைட்சர்

3). திருவள்ளுவரை உலகப் புலவர் என அழைத்தவர் கால்டுவெல்.

a) 1 மட்டும் சரி
b) 1,2 மட்டும் சரி
c) 1,3 மட்டும் சரி
d) அனைத்தும் தவறு

**QUESTION 57.** Unanswered

எத்தனை இணைகள் சரியாகப் பொருந்தியுள்ளன.

1. அறத்துப்பால் - வெண்ணிறப் பளிங்குக் கல்

2. பொருட்பால் - கருநிறப் பளிங்குக் கல்

3. இன்பத்துப்பால் - செந்நிறப் பளிங்குக் கல்

a) 1
b) 2
c) எதுவும்இல்லை
d) அனைத்தும்

**QUESTION 58.** Unanswered

பின்வருவனவற்றுள் சரியான கூற்றினைத் தேர்க. (செங்கோன்மை)

1)ஒரு நாட்டின் அரசன் நடுநிலைத் தவிராமல் குடிகளைக் காத்து, அறநெறிப்படி ஆட்சிசெய்வதைப் பற்றி கூறுவதே செங்கோன்மை அதிகாரமாகும்.

2)இவ்வதிகாரம் அறத்துப்பாலில் அமைந்த 35-வது அதிகாரமாகும்.

3)அறத்துப்பாலில் உள்ள ஊழியியலில் இடம்பெறுகிறது.

a) 1,2,3 சரி
b) 1,2 மட்டும் சரி
c) 1,3 மட்டும் தவறு
d) 2,3 மட்டும் தவறு

**QUESTION 59.** Unanswered

நீதிநெறிபிறழாமல் ஆட்சிசெய்யும் நாட்டில் நிறைந்திருப்பன யாவை?

1.சான்றோர்

2.நிறைந்த விளைச்சல்

3.எதிலும் வெற்றி

4.நோயற்ற வாழ்வு

5.பருவமழை

6.அமைதியான வாழ்வு

a) 1,2,4 மட்டும்
b) 1,3,4 மட்டும்
c) 2,5 மட்டும்
d) 2,4,5 மட்டும்

**QUESTION 60.** Unanswered

அரசனின் முறையான கடமைகளாக வள்ளுவர் கூறுவது யாது?

1)குடிமக்களைப் பிறர் துன்புறுத்தாமல் பாதுகாப்பதும்.

2)தவறுகளை ஆராய்ந்து தண்டிப்பதும்.

3)முறையான கால இடைவெளியில் திறை திரட்டலும்.

4)மக்கள் எளிதில் அணுகும் வண்ணம் இருத்தலும்.

a) 1,3,4 மட்டும்
b) 2,3 மட்டும்
c) 1,2 மட்டும்
d) 1,2,4 மட்டும்

**QUESTION 61.** Unanswered

ஒலி (ம) பொருள் வேறுபாடு அறிந்து சரியான இணையைத் தேர்வு செய்க?

சிண் - சின்

a) ஓர் அசைச்சொல் - சிறிய
b) சிண்டு - சிறிய
c) ஓர் அசைச்சொல் - கூட்டாளி
d) கூட்டாளி - ஓர் அசைச்சொல்

**QUESTION 62.** Unanswered

பொருத்துக:

A) அவன் - 1) அவ்விடம்

B) அவண் - 2) ஆண்பால் சுட்டு

C) அவணி - 3) தெப்பம்

D) அவனி - 4) நன்மை

E) ஆணம் - 5) உலகம்

F) ஆனம் - 6) குழம்பு

a) 1 2 4 5 3 6
b) 2 1 4 5 6 3
c) 2 4 1 5 6 3
d) 1 2 4 3 5 6

**QUESTION 63.** Unanswered

ஒலி வேறுபாடு அறிந்து பின்வரும் மயங்கொலிச் சொற்களுக்கு சரியான பொருத்தத்தைத் தேர்க?

சேணம் – சேனம் ; கேனம் - கேணம்

a) மெத்தை - பருந்து; மனநோய் - செழிப்பு
b) கல்லணை - சேனாதிபதி; செழிப்பு - மனநோய்
c) கல்லணை - மெத்தை; ஒலி - வளைவு
d) முகில் - சேனாதிபதி; ஒலி - கோணல்

**QUESTION 64.** Unanswered

கீழ்க்கண்ட பொருள்களுக்கு பொருந்துகிற ணகர/னகர வேறுபாட்டுச் சொற்களைத் தேர்ந்தெடுக்க?

ஆறு - எழுத்தின் சாரியை; பண்பி - வில்

a) சீணம் - சீனம் ; குனி - குணி
b) நணந்தம் - நனந்தம் ; ஒண் - ஒன்
c) நணந்தம் - நனந்தம் ; சீணம் - சீனம்
d) ஓணம் - ஓனம் ; குணி - குனி

**QUESTION 65.** Unanswered

பின்வருவனவற்றில் தவறாக பொருத்தப்பட்டுள்ள மயங்கொலிச் சொல் உள்ள தொடரை ஒலி வேறுபாடு மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து தேர்க?

(ணகர) (னகர)

a) கணம் - கூட்டம் ; அனிகம் - கூட்டம்
b) ஊண் - உணவு ; போனம் - உணவு
c) பணை - மூங்கில் ; கன் - மூங்கில்
d) போணம் - சோறு ; அன்னம் - சோறு

**QUESTION 66.** Unanswered

ஒலி மற்றும் பொருள் வேறுபாடு அறிந்து பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடு? (ணகர/னகர சொற்கள்)

a) உறுதியான உடல்தின்மை கொண்ட உண் அன்னன் வலிமையான ஆனை வந்தாலும் சாய்த்து விடுவான்.
b) உறுதியான உடல்திண்மை கொண்ட உன் அண்ணன் வலிமையான ஆணை வந்தாலும் சாய்த்து விடுவான்.
c) உறுதியான உடல்திண்மை கொண்ட உன் அண்ணன் வலிமையான ஆனை வந்தாலும் சாய்த்து விடுவான்.
d) உறுதியான உடல்தின்மை கொண்ட உண் அண்ணன் வலிமையான ஆணை வந்தாலும் சாய்த்து விடுவான்.

**QUESTION 67.** Unanswered

பொருத்துக:

A) தேநீர் - 1)தேயிலை நீர்

B) தேனீர் - 2)இனிப்பான நீர்

C) முந்நாள் - 3)மூன்று நாள்

D) முன்னாள் - 4)முந்தைய நாள்

E) எந்நாள் - 5)எந்த நாள்

F) என்னாள் - 6)என்னுடைய நாள்

a) 1 2 3 4 5 6
b) 2 1 4 3 5 6
c) 2 1 4 3 6 5

d) 1 2 3 4 6 5

**QUESTION 68.** Unanswered

காட்டில் வழி தவறி பிரிந்த தாய் மற்றும் குட்டி யானை அவையிடையே இருந்த அன்பு பிணைப் பி னால் மீண்டும் சேர்ந்தன. மக்கள் மாலை யிட்டு வரவேற்றனர். மேற்கண்ட சொற்றொடரில் அடிக்கோடிடப்பட்டுள்ள வரிசைப்படி பொருந்துகிற ணகர/னகர சொற்களைக் கண்டுபிடி?

a) வணம் - விடானி ; புணையல் - புனையல்
b) வனம் - விடானி ; புனையல் - புணையல்
c) வனம் - விடாணி ; புனையல் - புணையல்
d) வனம் - விடாணி ; புணையல் - புனையல்

**QUESTION 69.** Unanswered

ஒலி (ம) பொருள் வேறுபாடு அறிந்து பின்வரும் மயங்கொலிச் சொற்களுக்கு ஏற்ற பொருளைத் தேர்ந்தெடு?

அரண் - ஆதண் - இணி ; அரன் - ஆதன் - இனி

a) மதில் - குருடன் - ஏணி ; மஞ்சள் - ஆன்மா - எல்லை
b) கோட்டை - ஆன்மா - இனிமேல் ; சிவன் - நோய் - ஏணி
c) பாதுகாப்பு - வருத்தம் - எல்லை ; மஞ்சள் - ஆன்மா - இனிமேல்
d) கோட்டை - குருடன் - ஏணி ; சிவன் - வருத்தம் - இனிமேல்

**QUESTION 70.** Unanswered

ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருள் கூறுக?

(i) சோணம் - சோனம்

(ii) அணை - அனை

a) (i) முகில் - சிவப்பு (ii) தடுப்பு - கட்டி அனைத்தல்
b) (i) சிவப்பு - முகில் (ii) கட்டி அணைத்தல் - மீன்வகை
c) (i) முகில் - சிவப்பு (ii) மீன்வகை - அன்னை
d) (i) சிவப்பு - கடல் (ii) கட்டி அணைத்தல் - ஒத்தத்தன்மை

**QUESTION 71.** Unanswered

பொருத்துக:

A) நாளிகேரம் - 1) ஆச்சாமரம்

B) கோளி - 2) நாரத்தை

C) நரந்தம் - 3) தென்னை

D) சாலம் - 4) பனைமரம்

E) தமாலம் - 5) பச்சிலை மரம்

F) இரும்போந்து - 6) அரசமரம்

a) 1 2 3 4 5 6
b) 3 6 2 1 5 4
c) 6 2 1 5 3 4
d) 4 1 2 5 3 6

**QUESTION 72.** Unanswered

சரியான இணைகளைத் தேர்ந்தெடு?

1. கந்தம் - மனம்

2. மேதி - எருமை

3. வேரி - தேன்

4. கலாம் - போர்

5. வருக்கை - பலாப்பழம்

6. சதிர் - நடனம்

a) அனைத்தும்
b) 3 இணைகள்
c) 5 இணைகள்
d) 4 இணைகள்

**QUESTION 73.** Unanswered

பொருத்துக:

A) சத்துவம் - 1) போர் (ம) தீவிரமான செயல்கள்

B) கழை - 2) கரும்பு

C) இராசசம் - 3) அமைதி, மேன்மை

D) குழை - 4) சிறு கிளை

E) தாமசம் - 5) தாழ்மை, சோம்பல்

F) உழை - 6) ஒரு வகை மான்

G) புழை - 7) சாளரம்

a) 3 2 1 4 5 6 7
b) 1 2 3 4 5 6 7
c) 3 4 1 2 5 6 7
d) 1 4 3 2 5 6 7

**QUESTION 74.** Unanswered

பின்வரும் கூற்றுகளை ஆய்ந்து சரியானதைத் தேர்க?

1. 'பாண்டில்' என்பது வட்டத்தைக் குறிக்கிறது. வட்டம் என்பது எல்லையைக் குறிக்கிறது.

2. 'கம்மியர்' என்பது இரும்பு வேலை செய்பவரைக் குறிப்பிடவில்லை என்பது உண்மை இல்லை.

3. பணிலம், சுரிவளை போன்ற சொற்கள் 'சங்கு' என்ற பொருளைக் குறிப்பிடுகிறது என்பது உண்மையே.

4. கழனி, செறு, செறி, வெறி போன்ற சொற்களில் சில 'வயல்' என்பதை குறிக்கவில்லை.

a) அனைத்தும் சரி
b) 2 தவறு, 1, 3, 4 சரி
c) 1, 3 சரி, 2, 4 தவறு
d) 1 தவறு, 2, 3, 4 சரி

**QUESTION 75.** Unanswered

கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க?

(i) 'தாட்கு' என்பதன் எதிர்ச்சொல் என்ன?

(ii) தாமம், தரளம் முறையே குறிப்பிடுவது?

(iii) 'கமுகு' என்பது குறிப்பிடும் பொருள் இதற்கு பொருந்துகிறது?

a) i) முயற்சி ii) மாலை, முத்து iii) வயல்
b) i) முயலாமை ii) முத்து, மாலை iii) பாக்கு
c) i) ஆளாமை ii) மாலை, முத்து iii) வயல்
d) i) முயலாமை ii) மாலை, முத்து iii) பாக்கு

**QUESTION 76.** Unanswered

பொருத்துக:

A) PHONETICS - 1) மொழியியல்

B) LINGUISTICS - 2) ஒலியியல்

C) PHILOLOGIST - 3) ஒலியியல் ஆய்வறிஞர்

D) PHONOLOGIST - 4) மொழிநூல் அறிஞர்

E) POLYGLOT - 5) பன்மொழி அறிஞர்

a) 2 1 4 3 5
b) 1 2 4 3 5
c) 1 2 3 4 5
d) 2 1 3 4 5

**QUESTION 77.** Unanswered

பொருத்துக:

A) METAPHOR - 1)உவமையணி

B) SIMILE - 2)கட்டிலாக் கவிதை

C) RHYME - 3)உருவக அணி

D) SYLLABLE - 4)எழுத்துரு

E) FREE VERSE - 5)இயைபுத் தொடை

F) FONT - 6)அசை

a) 1 2 3 4 5 6
b) 3 2 6 4 1 5
c) 3 1 5 6 2 4
d) 1 2 3 6 5 4

**QUESTION 78.** Unanswered

தவறாக பொருத்தப்பட்டுள்ள இணைகளைத் தேர்ந்தெடு?

a) epigraphy - கல்வெட்டியல் ; embossed sculpture - புடைப்புச் சிற்பம்
b) launch vehicle - ஏவுகணை ; conical stone - நடுகல்
c) morpheme - உருபன் ; inscription - பொறிப்பு
d) Vegetable Soup - காய்கறி வடிசாறு ; Cultural Academy - பண்பாட்டுக் கழகம்

**QUESTION 79.** Unanswered

பின்வருவனவற்றில் சரியான இணைகள் எத்தனை எனக் காண்க?

1. Cultural Symbol - கலாச்சாரக் குறியீடு

2. Lexicon - பேரிலக்கணம்

3. Excavation - அகழாய்வு

4. Commodity export - பண்டமாற்று முறை

5. Cave Temple - குடைவரைக் கோயில்

6. Saline Soil - கவர்நிலம்

a) 6 இணைகள்
b) 4 இணைகள்
c) 2 இணைகள்
d) 3 இணைகள்

**QUESTION 80.** Unanswered

பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ் மொழியாக்கம் தருக?

(i) Passenger Name Record

(ii) Honorary Doctorate

a) (i) பயணியர் வருகைப் பதிவு (ii) மதிப்புறு முனைவர்
b) (i) பயணியர் வருகை ஆவணம் (ii) மதிப்புறு மருத்துவர்
c) (i) பயணியர் பெயர் ஆவணம் (ii) மதிப்புறு மருத்துவர்
d) (i) பயணியர் பெயர்ப்பதிவு (ii) மதிப்புறு முனைவர்

**QUESTION 81.** Unanswered

கீழ்க்கண்டவற்றுள் எந்தெந்த இணை சரியாக உள்ளது?

1) boulders - கூழாங்கற்கள்

2) cabble - கம்பி வடம்

3) canyon - செம்பிளம்

4) down - கூளம்

5) dip - இறக்கம்

6) elevation - உயரம்

a) (2, 4, 6)
b) (1, 3, 5)

c) (1, 2, 4, 6)
d) (1, 3, 5, 6)

**QUESTION 82.** Unanswered

பொருத்துக:

A) ENGRAVE — 1) குன்றம்

B) WARP — 2) இடுக்கி

C) TOR — 3) செடி

D) SCRUB — 4) செதுக்கு

E) PINCER — 5) காவிக்கல்

F) ochre — 6) மடிவு

a) (4, 6, 1, 3, 2, 5)
b) (4, 1, 6, 2, 3, 5)
c) (5, 6, 2, 3, 4, 1)
d) (5, 2, 4, 6, 3, 1)

**QUESTION 83.** Unanswered

கீழ்க்கண்டவற்றுள் எந்தெந்த இணை சரியாக உள்ளது?

1) உருமம் - உச்சிவேளை

2) முக்தி - துறக்கம்

3) முகஸ்துதி - முரடன்

4) மைத்துனன் - அளியன்

5) யமன் - கூற்றுவன்

6) யௌவனம் - மாலை

a) (2, 3, 5, 6)
b) (1, 2, 4, 5)
c) (2, 4, 6)
d) (1, 3, 5, 6)

**QUESTION 84.** Unanswered

பொருத்துக:

A) ரசாயனம் - 1) இவறி

B) லஜ்ஜை - 2) கால்வழி

C) லோபம் - 3) பண்டம்

D) லோடி - 4) கஞ்சம்

E) வமிசம் - 5) வெட்கம்

F) வஸ்து - 6) சாற்றியம்

a) (6, 5, 4, 3, 2, 1)
b) (4, 3, 6, 5, 1, 2)
c) (6, 5, 4, 1, 2, 3)
d) (4, 5, 6, 3, 2, 1)

**QUESTION 85.** Unanswered

கீழ்க்கண்டவற்றுள் எந்தெந்த இணை தவறாக உள்ளது?

1) ablation – தணித்தல்

2) gill – செவுள்

3) halo – ஒளிவட்டம்

4) pebble – மண்பொருள்

5) Pollen – ஆற்றுள்ளதாக்கு

6) Zeuge – காளான் பாறை

a) (1,4,5)
b) (2,3,6)
c) (1,3,6)
d) (2,4,5)

**QUESTION 86.** Unanswered

கீழ்க்கண்டவற்றுள் எந்தெந்த இணை தவறாக உள்ளது?

1) வாத்தியம் – இயம்

2) விகடம் – எதிர்

3) வியபிசாரம் – அலவை

4) வியர்த்தம் – ஏமாற்றம்

5) விருத்தாப்பியம் – மூப்பு

6) விஸ்தீரணம் – பரப்பு

a) (2,4)
b) (1,5)
c) (2,6)
d) (3,6)

**QUESTION 87.** Unanswered

பொருத்துக:

A) VEIN — 1) இறுகல்

B) TEMPO — 2) தாதுக்கொடி

C) SETTING — 3) தனிக்குன்று

D) RAPID — 4) திறல்

E) POTENTIAL — 5) சுழல்

F) KNOLL — 6) நிகழ்ச்சி வேகம்

a) (2,1,6,4,5,3)
b) (2,6,1,5,4,3)
c) (3,6,5,4,1,2)
d) (4,5,6,3,1,2)

**QUESTION 88.** Unanswered

பொருத்துக:

A) குர்சி — 1) ஈயம்

B) கிஸ்தான் — 2) நகர்

C) கஸ்பா — 3) சணலி

D) கவாத் — 4) வளைவு

E) கலாய் — 5) நாற்காலி

F) கமான் — 6) சலகு

a) (3,2,5,6,1,4)
b) (3,5,2,1,6,4)

c) (5,2,6,1,4,3)
d) (5,3,2,6,1,4)

**QUESTION 89.** Unanswered

கீழ்க்கண்டவற்றுள் எத்தனை இணை சரியாக உள்ளது?

1) Metal – மாழை

2) Moles – துறை

3) Ingot – பாளம்

4) Genesis – தோற்றம்

5) Gem – ஊன்பசை

6) Glassy – படிம

a) 6 இணை
b) 5 இணை
c) 4 இணை
d) 3 இணை

**QUESTION 90.** Unanswered

கீழ்க்கண்டவற்றுள் எத்தனை இணை சரியாக உள்ளது?

1) Fusain – கனிமக்கரி

2) Fumace – முகப்பு

3) Ebony – கருங்காலி

4) Diad – இருமடி

5) Cove – மேலோடு

6) Corona – சுடரொளி

a) 4 இணை
b) 2 இணை
c) 3 இணை
d) 1 இணை

**QUESTION 91.** Unanswered

தவறான இணையைக் காண்க.

a) அகஸ்மாத்தாய் – கடனாய்
b) அயன் – அரசுநிலம்
c) உருமால் – குட்டை
d) கச்சேரி – கோட்டம்

**QUESTION 92.** Unanswered

தவறான இணையைக் காண்க.

a) Mire – சதுப்புநிலம்
b) Fines – தீக்கல்
c) Engrave – செதுக்கு
d) Cist – தாழி

**QUESTION 93.** Unanswered

தவறான இணையைக் காண்க.

a) Clan – குலம்
b) Brook – வெடிப்பு
c) Bore – கழிமுகப் பேரலை
d) Beryl – கோமேதகம்

**QUESTION 94.** Unanswered

பொருத்துக

A) அபாயம் – 1) வாழ்க்கை

B) ஐதீகம் – 2) திரிபு

C) ஜீவியம் – 3) அஞர்

D) வீரன் – 4) கஞ்சம்

E) விகாரம் – 5) கருதீடு

F) லோபம் – 6) வயவன்

a) (3, 5, 6, 1, 4, 2)
b) (2, 4, 3, 6, 5, 1)
c) (3, 5, 1, 6, 2, 4)
d) (2, 4, 6, 3, 1, 5)

**QUESTION 95.** Unanswered

பொருத்துக:

A) DESALINATION – 1) பாறைநகர்வு

B) CURRENT – 2) படிகரை

C) CREEP – 3) பாறைமதில்

D) BAR – 4) உப்புநீக்கம்

E) AS – 5) குவி

F) ANTICLINE – 6) நீரோட்டம்

a) (4, 6, 3, 2, 1, 5)
b) (4, 6, 1, 3, 2, 5)
c) (6, 3, 5, 1, 4, 2)
d) (6, 5, 3, 1, 2, 4)

**QUESTION 96.** Unanswered

கீழ்க்கண்டவற்றுள் எந்தெந்த இணை சரியாக உள்ளது?

1) Apogee – புவி அண்மை

2) Anion – ஒவ்வாமை

3) Aridity – நிலப்பரப்பு

4) Canoe – ஓடம்

5) Cast – வார்ப்புரு

6) Detector – ஒற்றி

a) (2, 4, 5, 6)
b) (3, 5, 6)
c) (1, 2, 4, 6)
d) (1, 4, 5, 6)

**QUESTION 97.** Unanswered

கீழ்க்கண்டவற்றுள் எத்தனை இணை சரியாக உள்ளது?

1) Emerald – மரகதம்

2) Ebb tide – தாழ்ஓதம்

3) Gorge – மலையிடுக்கு

4) Isotropic – திசைச்சீர்

5) Nimbus – கார்முகில்

6) Plunge – வடிநிலம்

a) 6 இணை
b) 5 இணை
c) 4 இணை
d) 3 இணை

**QUESTION 98.** Unanswered

தவறான இணையைக் காண்க.

a) லோபி – பிசிரி
b) வியாகுலம்– நொம்பலம்
c) விருத்தாப்பியம் – வளர்ச்சி
d) ஜீரணோத்தாரணம் – பழுதுபார்ப்பு

**QUESTION 99.** Unanswered

கீழ்க்கண்டவற்றுள் எத்தனை இணை தவறாக உள்ளது?

1) Raw – கடுங்குளிரும்

2) Scar – மொட்டைப்பாறை

3) Pumice – போலீப்பிளவு

4) Potential – திறன்

5) Floe – பாளமிதவை

6) Fertility – தனித்துவம்

a) 2 இணை
b) 3 இணை
c) 4 இணை
d) 1 இணை

**QUESTION 100.** Unanswered

கீழ்க்கண்டவற்றுள் எந்தெந்த இணை தவறாக உள்ளது?

1) Dip – சரிவு

2) Dew – பனிநீர்

3) Coral – உறைதல்

4) Cataract – வார்ப்புரு

5) Cape – கண்டமுனை

6) Adiabatic – எழுச்சி எரிமலை

a) (1, 3, 5)
b) (2, 4, 6)
c) (1, 2, 5)
d) (3, 4, 6)

## Review in